சொல்லி ஆதரவு தந்த மாண்புமிகு உறுப்பினர்களுக்கு என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்து இந்தத் திருத்தச் சட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அவை முன் உள்ள கேள்வி :

"தமிழ்நாடு 1968-ம் ஆண்டு, இந்து சமய அறக் கட்டளைகள் (திருத்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 20/1968) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு, மசோதா பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2, 3, 4 பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்ற பட்டன.

**திரு. கோ. இர. ஞானசம்பந்தன் :** அமைச்சர் அவர்கள் நான் கொடுத்திருக்கக்கூடிய திருத்தங்களின் கருத்தை ஏற்றுக்கொண்டு கன்சல்டேட்டிவ் கமிட்டி ஏற்படுத்த வாக்குறுதி அளித்திருக்கின்ற காரணத்தால் நான் என்னுடைய திருத்தங்களை முன்மொழியவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஞானசம்பந்தன் அவர்கள் கொடுத்துள்ள திருத்தங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டனவாகக் கருதப்படும்.

22-வது பிரிவுக்குத் திருத்தம் கொடுத்த உறுப்பினர் அவையில் இல்லாததால் அது அவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பட்டதாகக் கருதப்படும்.

பிரிவுகள் 5 முதல் 36 வரை அவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறை வேற்றப்பட்டன.

நெடுந்தலைப்பு, முகப்புரை, முதல் பிரிவு ஆகியவை அவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே தமிழ்நாடு 1968-ம் ஆண்டு இந்து சமய அறக் கட்டளைகள் (திருத்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 20/1968) நிறைவேற்றப்பட வேண்டும் என்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு மசோதா சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

### 3. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

### (iii) மின்சார வாரியம் வாங்கக்கூடிய அதிக அளவு கடன் நிச்சயப்படுத்தப்படுதல்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, 1948-ம் ஆண்டு மின்சக்தி (வழங்கல்) சட்டத்தின் (மத்திய சட்டம் 54/1948) 65-வது பிரிவைச் சேர்ந்த (3) உட்பிரிவின் கீழ் அரசினர் மேற்படி பிரிவின் (1) உட்பிரிவின் கீழ் தமிழக மின்சார வாரியம் யாதொரு சமயத்தில் வாங்கக்கூடிய அதிக அளவுக் கடன் ரூபாய் ஐம்பத்தைந்து கோடியாகும் என்று தமிழ்நாடு அரசு நிச்சயிக்க உத்தேசித்திருப்பது ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தலைவர் அவர்களே, இப்போது உச்ச அளவு 40 கோடி என்று இருக்கிறது. அடுத்து வரக்கூடிய ஆண்டுகளில் மின்சார வாரியத்திற்காகப் பல்வேறு கடன்களை எழுப்ப வேண்டியிருப்பதால் 55 கோடி அளவுக்கு உச்ச அளவை உயர்த்தி வாங்க வேண்டிய கடனை வாங்கி மின்சாரப் பணிகளை ஆற்றப் பயன்படும் என்ற காரணத்தால் இந்தத் தீர்மானம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இதை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானத்தை வரவேற்றுப் பேசுகின்ற நான் ஒன்றை மட்டும் சொல்ல விரும்புகிறேன்.

இந்த அளவு சென்ற ஆண்டு 30 கோடியாக இருந்த அளவு 40 கோடி அளவுக்கு உயர்ந்து, அந்த அளவுக்குக் கடன் பெறும் வகையில் திருத்தம் செய்தோம். மறுபடியும் இப்போது 40 கோடி ஆக இருக்கின்ற அளவை 55 கோடியாக உயர்த்த வேண்டுமென்ற அளவிலே கோரிக்கை வந்திருக்கிறது. கடன் வாங்குவது கேவலம் என்றும், ஏற்கனவே இருந்த சர்க்கார் கடன்கார சர்க்காராக இருந்தது என்றும் இவர்கள் சொல்லிக்கொண்டிருந்தார்கள். இவர்கள் அரசுப் பொறுப்பை ஏற்ற பிறகு கடன் வாங்குவது எவ்வளவு அவசியம், தேவை என்பதையும், அதன் மூலம் செய்யப்படுகின்ற பணிகளின் காரணமாக நாட்டில் முன்னேற்றம் ஏற்படுகிறது என்பதையும் அவர்கள் உணர்ந்துகொள்ளுகின்ற அளவுக்கு இந்த ஆண்டு இந்தத் தீர்மானம் வந்திருக்கிறது.

அந்த அளவில் இந்தக் கடன்கள் மின்சார வாரியத்திற்கு கேட்கப்படுகின்றன. மிகச் சிறப்பாக இயங்குகிற மின்சாரவாரியத்திற்குத் தரப்படுகிற இந்த உச்சவரம்பு நல்லமுறையில் பயன் படுத்தப்பட்டு மின்சார வாரியம் இப்போது செய்துகொண்டிருக்கிற பணிகளோடு தனக்குத் தேவையான மற்றப் பொருள்களை, பல்ப் போன்றவைகளை உற்பத்தி செய்வதற்கும் இந்த பணத்தைப் பயன்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தீர்மானம் அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**(iv) தமிழ்நாடு 1952-ம் ஆண்டு மோட்டார் வண்டிகள் (பயணிகள்—சரக்குகள் மீது வரி விதித்தல்) சட்டத்தின் விவர அட்டவணையைத் திருத்த வரைவு விதிகள்.**

**The Hon. Thiru S. MADHAVAN: Sir, I move—**

**The following draft of a rule proposed to be made by the Governor of Madras under sub-section (2) of section 4 of the Madras Motor Vehicles (Taxation of Passengers and Goods) Act, 1952 (Madras Act XVI of 1952), amending the Schedule to the said Act, be approved.**

***Draft Rule.***

**In the Schedule to the Madras Motor Vehicles (Taxation of Passengers and Goods), Act, 1952, after sub-rule (3) of rule 1, the following sub-rule shall be added, namely :—**

**(4) The composition fee payble under section 4 in respect of transport vehicles which are normally kept in Kerala State and permitted to ply in Madras State under Short Term Licences issued under the arrangements between the two States, shall be as follows :—**

| *Class of vehicles.* | *For a period not exceeding Seven days.* | | *For a period exceeding seven days but not exceeding ten days.* | |
|---|---|---|---|---|
| (1) | (2) | | (3) | |
| | RS. | P. | RS. | P. |
| 1 Stage Carriages used as contract carriages. | 2 | 80 per seat. | 8 | 40 per seat. |
| 2 Goods vehicles or public carriers. | 12 | 50 per vehicle. | 37 | 50 per vehicle. |